

முன்னாள் அமைச்சரும் கழக விவசாய தொழிலாளர் அணி மாநில செயலாளருமான மறைந்த அழகு திருநாவுக்கரசு அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கழக நிர்வாகிகளுடன் இணைந்து அன்னாரின் நினைவிடத்தில் மலர் மாலை அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினார். உடன் ஒன்றிய செயலாளர் நா.கவியரசு மற்றும் அழகு திருநாவுக்கரசு அவர்களின் குடும்பத்தினர் ,கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### 7 நாட்கள் நடைபெறுகிறது! அமைச்சர்கள் பங்கேற்பு!

# ஏற்காடு கோடை விழா - மலர்காட்சி மே 23ல் தொடங்குகிறது!

## அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேட்டி!

சேலம், மே 15-

48வது ஏற்காடு கோடை விழா மற்றும் மலர்க்காட்சி வரும் 23.05.2025 முதல் 29.05.2025 வரை 7 நாள்கள் நடைபெறவுள்ளது.

கோடைவிழாவையொட்டி அண்ணா பூங்காவில் 1.50 இலட்சம் மலர்களைக் கொண்டு மலர்க் காட்சி, பழக்கண்காட்சி மற்றும் காய்கறிக் கண்காட்சிகளும் அமைக்கப் படவுள்ளது.

ஏற்காட்டில் கோடை விழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் இதனைத் தெரிவித்தார்.



சேலம் மாவட்டம், ஏற்காட்டில் 48வது கோடை விழா மற்றும் மலர்க்காட்சி வரும் 23.05.2025 முதல் 29.05.2025 வரை நடைபெறவுள்ளதை யொட்டி, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, முன்னிலையில் மாவட்ட ஆட்சியகரத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப்பின், சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க, சேலம் மாவட்டம், ஏற்காட்டில் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் ஆண்டுத்தோறும் ஏற்காடு கோடைவிழா மற்றும் மலர்க்காட்சி சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில், இந்த ஆண்டு 48வது ஏற்காடு கோடை விழா மற்றும் மலர்க்காட்சி வரும் 23.05.2025, வெள்ளிக்கிழமை அன்று தொடங்கி 29.05.2025, வியாழக்கிழமை வரை 7 நாள்கள் நடைபெறவுள்ளது. சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள், குழந்தைகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் மகிழ்விக்கும் வகையில் இக்கோடை விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

48வது கோடை விழா மற்றும் மலர்க்காட்சி தொடக்க விழாவில் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். இக்கோடைவிழா நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்றையதினம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நடத்தப்படவுள்ள ஏற்காடு கோடை விழா சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில், தோட்டக்கலைத் துறையின் சார்பில் அண்ணா பூங்காவில் 1.50 இலட்சம் மலர்களைக் கொண்டு மலர்க்காட்சி, பழக்கண்காட்சி மற்றும் காய்கறிக் கண்காட்சிகளும் அமைக்கப்படவுள்ளது. குறிப்பாக, வன விலங்குகளைப் பாதுகாத்து வனத்தை பாதுகாப்போம் என்ற உணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் வன விலங்குகளின் வடிவமைப்புகள், மேட்டூர் அணை உள்ளிட்ட பல்வேறு வடிவமைப்புகள் வண்ண மலர்களைக் கொண்டு அமைக்கப்படவுள்ளது.

மேலும், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் 25,000க்கும் மேற்பட்ட வண்ணமலர் தொட்டிகளைக் கொண்டு மலர்க் காட்சி அமைக்கப்படவுள்ளன. அதேபோன்று, தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு விளக்கும் வகையில் கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் கொழு கொழு குழந்தைகள் போட்டி, பாரம்பரிய உணவுப் போட்டி, மகளிர் திட்டத்தின் சார்பில் கோலப்போட்டி, சுற்றுலாத் துறையின் சார்பில் சுற்றுலா பயணிகளுக்கான படகு போட்டிகள் நடத்தப்படவுள்ளது. கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் செல்லப் பிராணிகள் (நாய்கள்) கண்காட்சி, கலைப் பண்பாட்டுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை ஒருங்கிணைந்து பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது.

மேலும், ஏற்காட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் கோடைவிழா நடைபெறும் அனைத்து நாள்களிலும் இன்னிசை நிகழ்ச்சிகள் மற்றும் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது. இளைஞர்களுக்கான கால்பந்து, கைப்பந்து, கிரிக்கெட், கபாடி, கயறு இழுத்தல், மாரத்தான் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

அதேபோன்று, ஏற்காடு கோடை விழாவை யொட்டி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சிறப்புப் பேருந்துகள் இயக்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கோடை விழா நடைபெறும் நாள்களில் கன ரக வாகனங்கள் உள்ளிட்ட 4 சக்கர வாகனங்கள் ஏற்காட்டிற்குச் செல்லும் போது அஸ்தம்பட்டி கோரிமேடு வழியாகவும், கீழே இறங்கும் போது ஏற்காடு - வாழவந்தி - கொட்டச்சேடு குப்பனூர் சாலை வழியாக செல்லும் வகையில் ஒருவழிப் பாதையாக மாற்றும் வகையில் போக்குவரத்து நெரிசல் இல்லாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், தோட்டக்கலை துணை இயக்குநர் திருமதி.மஞ்சுளா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி சங்கமித்திரை, மாநகர் நல அலுவலர் மரு.முரளி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் நகர கழகத்தின் சார்பில் நடைபெற்ற “நாடுபோற்றும் நான்காண்டு– தொடரட்டும் பல்லாண்டு” சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் நா.கனகராசன் சிறப்புரையாற்றினார். இதில் நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சரஸ்வதி ராஜேந்திரன், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் கே.செல்வராஜ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர், தாராபுரம் நகரமன்ற தலைவர் கு.பாப்புகண்ணன் உள்பட மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# அண்ணாநகர் சோ.மா.ராமச்சந்திரன் 100வது பிறந்தநாள் விழா இன்று!

## அமைச்சர்கள் – முன்னணியினர் வாழ்த்து! மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

சென்னை, மே 15-

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சோ.மா.ராமச்சந்திரன் அவர்களின் 100-வது பிறந்தநாள் விழா, அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் வாழ்த்துகின்றனர் என்று மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பையும் நற்சான்றிதழையும் பெற்றவரும் கழகத் தலைவர் இந்தியாவின் நம்பர் 1 முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நம்பிக்கையுமான முன்னாள் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர், ஒருங்கிணைந்த அண்ணாநகர் பகுதி செயலாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கழக செயல் வீரர் சோ.மா. ராமச்சந்திரன் அவர்களின் 100வது பிறந்த நாள் விழா இன்று (15.05.2025), காலை 9 மணியளவில் அய்யாவு மஹால், அமைந்தகரை, சென்னை - 29 என்ற முகவரியில் நடைபெறுகின்றது.

வாழ்க பல்லாண்டு பல்லாண்டு என வாழ்த்த வருகை தரும் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் பகுதி & வட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர், தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், மூத்த முனோடிகள் என அனைவரும் பெருந்திரளாக வந்து அவரை வாழ்த்துக்களை பெற வருகை தருமாரு என வரவேற்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



ஈரோடு மத்திய மாவட்டம், பெருந்துறை சட்டமன்ற தொகுதி பார்வையாளரும், கோவை மாமன்ற உறுப்பினரும், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளருமான மாலதி நாகராஜன் அறிமுக கூட்டம் ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் டி.ஜி.கே.பூபதி, ஒன்றிய செயலாளர்கள் பெருந்துறை கே.பி.சாமி, பெரியசாமி, பால் சின்னுசாமி, சென்னிமலை பி.செங்கோட்டையன், ஊத்துக்குளி ஈஸ்வரமூர்த்தி, சுப்பிரமணியம், ராஜா, பேரூர் செயலாளர்கள் ஓ.சி.வி.ராஜேந்திரன், அகரம் திருமூர்த்தி, தங்கமுத்து, குருசாமி, சென்னியப்பன், கே.பி.தங்கமுத்து, செந்தில்முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள், BLA2 பாகமுகவர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு” கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் தமையனூர் ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் அன்பு (எ) தங்க மருதமுத்து தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் செந்தாமரை கண்ணன் சிறப்புரையாற்றினார். இதில் மத்திய ஒன்றிய செயலாளர் வி.எஸ். மூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் கருணாநிதி, பொதுக்குழு உறுப்பினர்கள் சோமசுந்தரம் முத்துலிங்கம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் சீனிவாசன், பேரூர் செயலாளர்கள் வெங்கடேசன், பாபு, மாவட்ட பிரதிநிதிகள் தனபால், மகாலிங்கம், சுப்பிரமணி, ராஜ்குமார், ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் திராவிட மாடல் அரசின் ”நாடு போற்றும் நான்காண்டு – தொரட்டும் பல்லாண்டு” சாதனை விளக்க பொதுக்கூட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன் வரவேற்பில் பெருமாநாடு கலைஞர் திடலில் நடைபெற்றது. தானூர் சிவகொழுந்து சிறப்புரையாற்றினார். நிகழ்வில் கே.ஆர்.என்.போஸ், சு.சண்முகம், சி.குறிஞ்சிவாணன், வே.ராஜேஷ், எம்.எல்.ஏ.முகமது ரிஷா, கே.என்.அமானுல்லா, என்.அன்சாரி பாசித், சுந்தர்ராஜ், எஸ்.நிஜாமுதீன்கை.பழனிச்சாமி, சி.ராஜேந்திரன், வி.வி.பரஞ்ஜோதி, எம்.முத்துச்சாமி, முத்துலட்சமி ராஜேந்திரன், பழ.பாண்டியன், எஸ்.முருகையன், சித.சண்முகம், எம்.கோவிந்தராஜ், ரா.முத்து செல்வம், ஆர்.கோபாலன், கார்த்திக், திருப்பதி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.